**மஹர பிரதேச சபை**
**கம்பஹா மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 பெப்ரவரி 29 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூலை 15 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 செப்தெம்பர் 30 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மஹர பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 07 காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதி ரூபா 179,111 தொகை குறைவாக கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக கணக்குகளை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்துதல் வேண்டும். | மில்லகஹவத்தை காணி கணக்கீடு செய்யப்படாதிருந்தமையினால் சரியாக இனங்கண்டதன் பின்னர் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 16 ஊழியர்களிடம் இருந்து சம்பளமற்ற விடுமுறைக்காக அறவிட வேண்டியிருந்த ரூபா 105,156 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டின் போது உடன்படிக்கை செய்யப்படாத வேலையொன்றின் கடன்கொடுத்தோராக ஒதுக்கப்பட்ட ரூபா 181,971 தொகை சரி செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.3.2 கணக்காய்விற்கு தேவையான சான்றுகள் காணப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 426,211,378 தொகையான 09 கணக்கு விடயங்களுக்காக தேவையான தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுட்டிக் காட்டப்பட்ட கணக்காய்வு சான்றுகள் கணக்காய்விற்காக கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | 2020 இன் இறுதிக் கணக்கில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 24(1)(ஆ) பிரிவு | சபை அதிகார பிரதேசத்திற்குரிய புதிய வீதிகள் தொடர்பாக ஆய்வினை மேற்கொண்டு பெயர் பட்டியலொன்று வர்த்தமானி மூலம் பிரசுரிக்கப்பட்டிருக்கவில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் | | | |
| (i) நிதிப் பிரமாணம் 571(1) | இரண்டு வருடங்களை விஞ்சிய பொது வைப்பு ரூபா 1,800,240 தொகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இந்த ஆண்டு முதல் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | நிதிப் பிரமாணம் 371 | 2004 மற்றும் 2005 ஆம் வருடங்களுக்குரிய தேர்தல் பிரயாண செலவின முற்பணம் ரூபா 97,910 தொகை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆவணப்படுத்தப்பட்ட சான்றுகள் அழிவடைந்திருந்தமையினால் அந்த தகவல்களை வழங்க முடியாதிருந்தது. |

## 1.5 தீர்க்கப்படாத மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் கணக்குகளின் பிரகாரம் பல வருடங்கள் முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 873,685 தொகையான 13 மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ந்து பார்த்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சரிசெய்வதற்கு முடியுமான விடயங்கள் மற்றும் அங்கீகாரம் பெற வேண்டிய விடயங்கள் வேறுபிரிக்கப்பட்டு கணக்குகளை சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் உள்ளவாறு 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையே ரூபா 2,326,591 தொகையான கடன்பட்டோர் மீதியும், 01 வருடத்திற்கும் 03 வருடங்களுக்கும் இடையிலான ரூபா 40,251,120 தொகையான கடன்பட்டோர் மீதியும் காணப்பட்டது. | பெறவேண்டிய மீதியை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீதிகளை உறுதிப்படுத்தி கணக்குகள் சீராக்கப்படுகின்றது. |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் 03 வருடங்களுக்கும் 05 வருடங்களுக்கும் இடையே ரூபா 47,555,076 கடன் மீதியும், 01 வருடத்திற்கும் 05 வருடங்களுக்கும் இடையிலான ரூபா 42,898,769 தொகையான கடன்கொடுத்தோர் மீதியும் காணப்பட்டது. | செலுத்தவேண்டிய மீதிகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீதிகளை உறுதிப்படுத்தி கணக்குகள் சீராக்கப்படுகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மஹர உப அலுவலகத்திற்குரிய வீட்டு வாடகையாக 1989 முதல் 2017 வரை ரூபா 620,582 தொகையொன்று வைப்பாக தொடர்ச்சியாக காணப்பட்டது. | தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வீட்டு வாடகை வைப்புக்களை பெறுமாறு உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 38,761,396 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 79,033,746 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 13,298,750 | 10,912,623 | 11,363,697 | 3,906,604 | 11,086,300 | 11,640,113 | 11,353,520 | 4,248,493 |
| (ii) | வாடகை | 4,565,000 | 5,086,821 | 5,167,921 | 9,500 | 6,920,000 | 6,901,084 | 6,953,014 | -1,986,894 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 2,462,150 | 1,972,646 | 1,971,646 | 14,500 | 2,580,400 | 2,262,157 | 2,263,157 | -237,664 |
| (iv) | ஏனைய வருமானம் | 325,929,000 | 266,074,507 | 262,315,889 | 493,371 | 150,457,000 | 262,642,532 | 262,698,167 | 505,350 |
| | | 346,254,900 | 284,046,597 | 280,819,153 | 4,423,975 | 171,043,700 | 283,445,886 | 283,267,858 | 2,529,285 |

#### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 3,238,829 தொகையான ஆதன வரியை அறவிடுவதற்கு 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 158(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிலுவை ஆதன வரியை செலுத்துமாறு அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மஹர உப அலுவலகத்தின் 34 வியாபாரங்களில் இருந்து அறவிட வேண்டிய வியாபார மற்றும் கைத்தொழில் வரி ரூபா 75,200 ஆகும். | நிலுவை வரியை அறவிடுவதற்காக நடவடிக்கைகள் விருத்தி செய்யப்படல் வேண்டும். | வியாபாரிகளுக்கு வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

### 2.2.3 தொலைத்தொடர்பு கோபுர வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 03 உப அலுவலகங்களின் நிலுவை ரூபா 42,000 ஆக இருந்தது. | நிலுவை மீதியை தாமதமின்றி அறவிட வேண்டும். | தாமதமின்றி உரிய நிலுவைப் பணத்தை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 பிரிவின் கீழ் சகல பிரதான விடயங்களையும் நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் 04 விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | தேவையான உப விதிகள் விதிக்கப்பட வேண்டும். | தேவையான உப விதிகளை எதிர்காலத்தில் விதிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

## (ஆ) கைவிடப்பட்டுள்ள இலக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சபைக்குக் கிடைக்கப்பெற்ற 170 செயற்திட்டங்களுக்கு ஒப்பந்தகாரர்கள் முன்வராமையின் காரணமாக கைவிடவேண்டி ஏற்பட்டிருந்தது. | சரியான மதிப்பீட்டின் பின்னர் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். | ஒப்பந்தகாரர்கள் முன்வராமை மற்றும் சமூக சங்கங்கள் முன்வராமையின் அடிப்படையில் கைவிடவேண்டி ஏற்பட்டிருந்தது. |

## (இ) சுற்றாடல் பிரச்சினை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் முறையற்றதாக கழிவுப் பொருட்கள் அகற்றப்பட்டமையினால் சபை அதிகார பிரதேசத்தில் கைத்தொழில்களில் இருந்து சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்பட்டமையினால் சுற்றாடல் துஷ்பிரயோகம் தொடர்பாக கிடைத்த 11 முறைப்பாடுகள், துண்டு கழிவுப் பொருட்களில் 08 முறைப்பாடுகள் மற்றும் 437 பொதுமக்கள் முறைப்பாடுகள் என்பன தீர்த்து வைக்கப்பட்டிருக்கவில்லை. | மக்களின் முறைப்பாடுகள் தாமதமின்றி தீர்த்து வைக்கப்பட வேண்டும். | பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு நீதிமன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |

## (ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி இலக்கு தொடர்பான 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக பிரதேச சபை அறிந்திருக்காமையின் காரணமாக உலகலாவிய குறிகாட்டிகளின் மூலம் பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் பொதுமக்களின் வாழ்க்கை நிலை மற்றும் சுகாதார நிலைமைகளைக் கட்டியெழுப்பும் வகையில் நீண்ட காலத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்தமையினால் 2019 திசெம்பர் 27 ஆம் திகதி குறைந்த வருமானம் பெறும் சுய தொழில்களில் ஈடுபடுகின்ற 06 குடும்பங்களுக்காக ரூபா 292,230 பெறுமதியுடைய 06 தையல் இயந்திரங்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததன. | நிலைபேறான அபிவிருத்தி திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறைந்த வருமானம் பெறும் 06 குடும்பங்களுக்கு தையல் இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வீதிப் பதிவேட்டின் பிரகாரம் அதிகாரப் பிரதேசத்தில் உள்ள சகல வீதிகளினதும் எண்ணிக்கை 7943 ஆக இருந்த போதிலும், அதில் 2018 திசெம்பர் 31 வரையில் 24 வீதிகளும், சில வரைபடங்களும் மாத்திரமே வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. 2019 ஆம் ஆண்டில் எந்தவொரு வீதியும் வர்த்தமானியில் பிரசுரித்தலோ அல்லது வரைபடங்ளை தயாரித்தலோ மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சகல வீதிகளுக்காகவும் வரைபடம் தயாரிக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பாரியளவான கிரயமொன்றை செய்யவேண்டியிருந்தமையினால் 10 வீதிகள் வீதம் தெரிவு செய்து வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மரணமடைந்த உத்தியோகத்தரிடம் இருந்து முன்னைய ஆண்டுகள் முதல் அறவிட வேண்டிய இடர் கடன் மீதி ரூபா 98,654 ஆகும். | அறவிட வேண்டிய இடர் கடனை தாமதமின்றி அறவிட வேண்டும். | கடன் பணத்தை அறவிடுவதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

**ஆதன வரி / ஆதனங்களின் மதிப்பீடு காலரீதியில் மேற்கொள்ளப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அதிகார பிரதேசத்தில் அசைவுறாத ஆதனங்களின் மதிப்பீடு மேற்கொண்டு 10 வருடங்களை கடந்திருந்ததுடன் புதிய ஆதனவரி மதிப்பீடொன்று 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது இதுவரையிலும் அமுல்படுத்தப்படாமையினால் அதிகார பிரதேசத்திற்குரிய 12,988 ஆதனங்களில் தற்போது பொருத்தமான மீள்திருத்த மதிப்பீட்டு பெறுமதியின் அடிப்படையில் வரி அறவிடப்பட்டிருக்கவில்லை. | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் ஆதனவரி அறவிடப்பட வேண்டும். | 2021 ஆம் ஆண்டில் புதிய மதிப்பீட்டை அமுல்படுத்த முடியும். |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 பொது வசதிகளுக்கான காணி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கண்டி வீதியில் கிருள்ளவலயில் காணப்படுகின்ற 4.5 பேர்ச் காணியை அபிவிருத்தி செய்வதற்கோ அல்லது வணிக ரீதியான நடவடிக்கைகளுக்கு ஈடுபடுத்தவோ செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்த காணியை சபைக்கு வருமானம் பெறக் கூடிய வகையில் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. |

### 3.4.2 வருடாந்த பொருள் / இருப்பு பரிசோதனை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொருள் மெய்மெய்யாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 70,667 பெறுமதியான 423 புத்தகங்கள் காணமல் போயிருந்ததுடன், ரூபா 177,105 பெறுமதியான 600 புத்தகங்கள் அங்கத்தவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களினால் எடுத்துச் செல்லப்பட்டு மீள கையளிக்கப்பட்டிருக்கவில்லை. | புத்தகங்கள் காணமல் போனமை தொடர்பாக சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | காணாமல் போன புத்தகங்களை பெற்றுக் கொள்வதற்கு சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நூலக மெய்மெய்யாய்வு சபை அறிக்கையின் பிரகாரம் ரூபா 123,972 பெறுமதியான 848 புத்தகங்கள் மெய்மெய்யாய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. |

**3.5 பெறுகைகள்**

**3.5.1 வருடாந்த பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2006 சனவரி 25 ஆம் திகதிய தேசிய பெறுகைகள் முகவராண்மை சுற்றறிக்கை இலக்கம் 08 இன் 4.2.1(பீ) மற்றும் (சீ) இன் பிரகாரம் பிரதான பெறுகைத் திட்டம் மற்றும் வருடாந்த விரிவான திட்டம் என்பன தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பின்பற்றப்பட வேண்டும். | எதிர்வரும் வருடத்திற்காக தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படும். |